<u>சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ. எண். 34/2008

| | | |
|---|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | .. | 3 |
| பெயர் | .. | மோகனம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் நாள் வியாழன்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வழக்கில் 3ம் தரப்பினர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். பி.சா.ஆ.8ல் சாட்சிகளில் 1வதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை**

நான் செய்யாரில் 10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவந்தேன். 2007 ஆம் ஆண்டு முதல் சென்னையில் வசித்து வருகிறேன். செய்யாரில் இருந்தபோது 1ம் பிரதிவாதி வீட்டில் வசித்துவந்தேன் என்றால் வீடுகள் மாறிமாறி வசித்து வந்தேன். 1ம் பிரதிவாதி ரொம்ப வருடங்களாக சென்னையில் தான் வசித்து வந்தார். நான் என்ன வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்று தெரியும். வாதிகள் மற்றும் 5ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் முதல் மனைவி குழந்தைகள். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் 2வது மனைவி. 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர்கள்

தான் 3, 4 பிரதிவாதிகள். 1ம் பிரதிவாதிக்கு செய்யாரில் வீடு உள்ளது. கொடநகரில் இருந்த இடங்களை மனைகளாக போட்டு விற்றுவிட்டார். 1ம் பிரதிவாதி சென்னையில் முகப்பேரில் வீடுவாங்கி வசித்துவந்தார். 05.05.2014 ஆம் தேதி 1ம் பிரதிவாதி தொலைபேசி மூலமாக சொன்னார். 1ம் பிரதிவாதி தொலைபேசி மூலமாக என்னை அழைத்தார் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை. நானும், என் மகனும் 1ம் பிரதிவாதி சொன்னதில் பேரில் சென்றோம். நாங்கள் சென்றபோது 1ம் பிரதிவாதி வீட்டில் அவர் மனைவி, அவருடைய குழந்தைகள் இல்லை, அவர் மட்டும் தான் இருந்தார். அவருக்கு வேண்டிய 2 பேர் வந்திருந்தார்கள். அவர்கள் யார் என்று அங்கு நான் சென்றபிறகு தான் தெரியும். ஏற்கனவே பச்சை பேப்பரில் தட்டச்சு செய்து வைத்திருந்தார்கள். தட்டச்சு செய்து வைத்திருந்ததற்கான சங்கதிகளை யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. உயில் எ அட்டவணை சொத்து முகப்பேரில் உள்ள வீடு அதை சீனிவாசனுக்கும், பி அட்டவணை சொத்து நரேஷ்பாபுவிற்கும், சி அட்டவணை சொத்தை சீனிவாசனுக்கும், நரேஷ்பாபுவிற்கும், டி அட்டவணை சொத்தை அவருடைய மனைவி பாலம்மாளுக்கும் எழுதிவைத்தார். உயில் ஆவணத்தை 2014 ஆம் ஆண்டு பார்த்தது தான், ஞாபகம்வைத்து சொல்கிறேன். என் மனைவி பெயரில் வீட்டுமனை வாங்கியிருக்கிறேன், செய்யாரில் வாங்கியுள்ளேன். என்னுடைய மனைவி பெயரில் வாங்கிய கிரய ஆவணத்தில் உள்ள வாசகங்களை சொல்லமுடியுமா என்றால் 1988 ஆம் ஆண்டு வாங்கியது. உயில் ஆவணத்தை பாலம்மாளிடம் வாங்கி படித்து பார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 29.05.2014 ஆம் தேதி இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதி உடல்நலம் சரியில்லாமல் இறந்துவிட்டார். உயில் எழுதியதாக சொல்லும் தேதியில் இருந்து 20 நாட்களுக்கு பிறகு இறந்துவிட்டார். வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. 2ம் பிரதிவாதி சொல்லிதான் சாட்சியம் அளிக்கவந்தேன். பி.சா.ஆ.8ல் ஏற்கனவே 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்துவைத்திருந்ததை வைத்து பி.சா.ஆ.8 உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால்

சரியல்ல. வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி இறந்தபிறகு உயில் ஆவணத்தை மோசடியாக 2, 3, 4 பிரதிவாதிகள் உருவாக்கியுள்ளார்கள் என்றும், அதற்கு நான் உடந்தையாக இருந்துள்ளேன் என்று சொன்னால் தவறு. 1ம் பிரதிவாதி 2, 3 மாதங்களாக உடல்நலம் சரியில்லாமல் இருந்துவந்தார் என்றும், 1ம் பிரதிவாதி நல்ல உடல்நிலையுடன் இருந்துவந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3, 4 பிரதிவாதிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.